உ





# ஞானச்சுடர்

யாழ்/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

ஆனி மலர்

1998




வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

**களவினாலாகிய ஆக்கம் அளவிறந்து**
**ஆவது போலக்கெடும்.**

**பொருள்;**

களவெடுப்பதனால் பெறப்படும் பொருள் வளர்வது போலத் தோன்றினாலும் இறுதியில் கெடுதியாகவே முடியும்.

ஸ்ரீ

### அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ, அருணாசலசிவ
அருணாசலசிவ, அருணாசலா!

16. காந்த மிரும்புபோற் கவந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணாசலா (அ)

17. கிரியுரு வாகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந் தருளுவா யருணாசலா (அ)

18. கீழ்மே லெங்கும் கிளரொளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் யருணாசலா (அ)

19. குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணாசலா (அ)

20. கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்ந்தரு ளருணாசலா (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★ ஞானச்சுடர் ★★

வெளியீடு - 7 சுடர் - 6

1998 ஆனி

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 1) மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 1 - 5 |
| 2) அர்த்தமும் அனர்த்தமும் | 6 - 7 |
| 3) காசி காண்டம் அறிமுகம் | 8 - 9 |
| 4) செல்வச் சன்னிதி முருகன் | 10 - 11 |
| 5) தெய்வ வாசகம் | 12 - 14 |
| 6) பெறுவதற்கரிய பிறவி | 15 - 16 |
| 7) சந்நிதியில் அன்னதானத் தொண்டு | 19 - 21 |
| 8) பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியம் | 19 - 24 |
| 9) அறிவியல் உண்மைகள் | 25 |
| 11) Easy Way to Learn English (part - 6) | 26 - 28 |

அன்பளிப்பு: மலர் ஒன்று 25/- ரூபா
வருடச்சந்தா தபால் செலவுடன் 325/- ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: தமிழ்ப்பூங்கா அச்சகம்,
நெல்லியடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பிரதி பெறுபவர்கள்

**திரு. சி. விபுலானந்தன்**

**திரு. சி. கணேசலிங்கம்**
தமிழ்ப்பூங்கா அச்சகம் - நெல்லியடி.

**திரு. சி. விஸ்வலிங்கம்**
ஆசிரியர், இமையாணன் கிறிஸ்தவ தமிழ்க் கலவன் பாடசாலை

**திரு. சி. கந்தசாமி**
ஸ்ரீதுர்க்கை, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

**திரு. வ. பாலசிங்கம்**
கிராமசேவையாளர், கரணவாய் மத்தி, கரவெட்டி.

**திரு. சி. பத்மநாதன்**
கண்ணன் போட்டோ பிரதி நிலையம், பருத்தித்துறை.

**திரு. வ. சிவகுமாரன்**
கரணவாய் மத்தி, கரவெட்டி.

**கு. ரவீந்திரன்**
ஆசிரியர், இரணைமடு

**அ. ஜெகதீஸ்வரன்**
ஆசிரியர், ஆ. பி. கல்லூரி, உடுப்பிட்டி.

**பொ. மகேசு**
எரிபொருள் விற்பனை உரிமையாளர், உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் - வைகாசி வெளியீடு

வைகாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டுநிகழ்வில் வெளியீட்டுரையை பருத்தித்துறை பொருட் நிறுவனத்தின் முகாமையாளரான திரு. சந்திரசேகரசர்மா அவர்களும் ஆய்வுரையை திரு. க. நவரத்தினம் ஆசிரியர் அவர்களும் மேற் கொண்டனர்.

வெளியீட்டுரை:

இன்றைய இளைஞர் சமுதாயத்தை வழி நடாத்தி எதிர்கால நற்பிரஜைகளாக்குகின்ற பாரிய பொறுப்பினை ஞானச்சுடர் செய்து வருவதாக திரு. சந்திரசேகரசர்மா அவர்கள் தனது வெளியீட்டுரையில் குறிப்பிட்டார்கள். எமது சமயத்தின் நல்ல தத்துவங்களையும், நல்ல பண்புகளையும் எமது மக்கள் தெரிந்து கொள்ளாதிருக்கின்ற அதே நேரம் மேலைத்தேசத்தவர் பலர் அவற்றை பின்பற்றிவருவதையும் சந்திரசேகர சர்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே ஞானச்சுடர் போன்ற ஆத்மீகசஞ்சிகைகள் எமது மக்களுக்கு இன்று மிகவும் அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

ஆய்வுரை:

நீண்ட தூர சிந்தனையுடன் சரியான முறையில் திட்டமிட்டு, தொடர்ச்சியாக ஆத்மீகச் செயற்பாடுகளை செய்து வருகின்ற ஒரு அமைப்பாக சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை விளங்குவதையிட்டு சைவமக்களாகிய நாம் முதலில் பெருமைப்பட வேண்டும் என திரு. க. நவரத்தினம் ஆசிரியர் அவர்கள் தமது ஆய்வுரையில் குறிப்பிட்டார்கள்.

ஞானச்சுடர் மலரினுடைய தன்மைகளையும், அது வெளியிடப்படுகின்ற முறைகளையும் உள்ளடக்கியிருக்கின்ற விடயங்களையும் ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது மூன்று விடயங்கள் பற்றி எம்மை சிந்திக்க வைக்கிறது.

1. மலரில் எந்த வகையான விளம்பரங்களையும் உள்ளடக்காது வெளிவருவது தனித்துவமாக உள்ளது.
2. அச்சிடுவதற்கான நிதி தொடர்பாக எவருடைய உதவிகளையும் இவர்கள் நாடாது சுயமாகத்தாங்களே தாங்கிக் கொள்கின்றனர்.
3. மலரினை விற்பனை செய்யும் பொழுது ஒரு வியாபாரப்பொருளாகக் கருதாது அதற்குரிய புனிதத்தன்மையுடன் விரும்பியவர்களுக்குவழங்கிவருகின்றனர்.

இவ்வாறு எவற்றையுமே மற்றவர்களிடமிருந்து நாடாது மலர்வெளியீட்டை மேற்கொள்ளுகின்ற இவர்கள் மலருக்கு பொருத்தமான தரமான ஆக்கங்களை மட்டும் வழங்குமாறு அறிஞர்பெருமக்களை அன்பாகக் கேட்கின்றனர்.

இறுதியாக மலர் உள்ளடக்கியிருக்கின்ற கட்டுரைகளைப் பற்றி சுருக்கமாக ஆய்வு செய்து தனது ஆய்வுரையை நிறைவு செய்தார்கள்.

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## (மகாபாரதத்திலிருந்து)

### கங்கையின் நாயகன்

யயாதி மன்னரின் இஷ்டப்படி பூரு மிகவும் சிறப்பாக நாட்டைப் பரிபாலித்து மேலான உலகினைப் பெற்றான். இத்தகு மேன்மை பெற்ற குலத்திலே பெரும் புகழ்படைத்த மன்னர் பலர் தோன்றினர். துஷ்யந்தன், பரதன், குரு, பிரதீபன், சந்தனு முதலியோர் இவர்களிற் சிறந்தோராவர். சந்தனு மன்னன் பிரதீப மன்னனின் மைந்தனாகத் தோன்றியமை மிகவும் விசித்திரமான சம்பவமாகும். அதனை விளக்குவோமாக.

மகாபிஷக் என்னும் பூவுலக மன்னன் பெருங்கீர்த்தியுடையவன். அறநெறி பிறழாது ஆட்சி செய்தவன்; வேள்விகள் பல செய்து சொர்க்கத்தையடைந்தவன். பிரம்மசபையில் பிரம்மனைத் தரிசிக்கும் பொருட்டு தேவர்களுடன் மகாபிஷக்மன்னனும் சென்றிருந்தான். அவ்வமயம் நதிகளுள் சிறந்தவளாகிய கங்காதேவியும் அங்கு வந்து சேர்ந்தாள். கங்கையின் ஆடை காற்றினால் சிறிது கலைவுண்டது. இதனைக் கண்ணுற்ற தேவர்கள் நாணித்தலை குனிந்தனர். ஆனால் பிரம்ம சபையிலிருந்த மகாபிஷக் மன்னனோ கங்கையை நோக்கியவண்ணமேயிருந்தான். இதனைக் கண்ணுற்ற பிரம்மதேவர் மன்னனை நோக்கி "மன்னா, மனிதப் பிறவியெடுத்து எந்தக் கங்கையின் பால் உன்தன் மனம் சென்றதோ அவளை மணந்து இன்புற்றுப் பின்னர் மேலான உலகுக்கு வருவாயாக" என்று சபித்திட்டார். கங்கையும் மன்னனின் நினைவாகவே சபையினின்றும் திரும்பினாள். கங்கை வரும் வழியில் அட்டவசுக்கள் நிலைகுன்றிக் கவலையுடன் வீற்றிருப்பதை நோக்கி "யாது காரணம் பற்றிக் கவலையடைந்திருக்கின்றீர்கள்" என வினவினாள். அதற்கு வசுக்கள் தங்களுக்கு வசிஷ்ட மகரிஷியின் சாபம் கிடைத்துள்ளதாகவும் அதன்படி தாங்கள் மானுடராகப் பிறக்க வேண்டியுள்ளது என்றும் அதனால் கவலையடைந்திருப்பதாகவும் தெரிவித்தனர். "மானுடராகப் பிறக்கும் போது நாங்கள் மானுடர் வயிற்றில் பிறக்கவிரும்பவில்லை எனவே எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ தாயாக வரவேண்டும்." என்று வசுக்கள் கங்காதேவியை வேண்டிக் கொண்டனர். அப்போது கங்காதேவி நீங்கள் யாரைத் தந்தையாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்று வினவினாள். அதற்கு வசுக்கள் பிரதீபமன்னரின் புதல்வனாகப் பிறக்கும் சந்தனு மன்னனை நாங்கள் தந்தையாக அடையவிரும்புகிறோம் எனக் கூறினர். அதற்குக் கங்கை சம்மதித்தாள். மீண்டும் வசுக்கள் கங்காதேவியிடம் ஓர் வேண்டுதலை வேண்டிக்கொண்டனர். "கங்கையே நாங்கள் பிறந்தவுடன் எங்களைத் தண்ணீரில் வீசிக் கொன்று எங்களுக்கு விரைவில் சாபவிமோசனம் கிடைக்க உதவவேண்டும்" என்பதே அவர்களின் வேண்டுதலாகும். அப்போது கங்கை அவ்வாறாயின் சந்தனு மன்னனுக்கு ஓர் மகவாவது இருத்தல் வேண்டும் அல்லவா, ஓர் புதல்வனையாவது உயிருடன் விடுதல்வேண்டும் இதற்கு யாது செய்தல் வேண்டும்" என்று வினவினாள். அதற்கு வசுக்கள், எங்கள் சக்தியில் ஒரு பகுதியை நாம் ஒவ்வொருவரும் தருகிறோம் அவை யனைத்தும் ஒருங்கு சேர்ந்து ஒரு புதல்வன் பிறப்பான் அவன் சந்தனு மன்னனின் புதல்வனாக வளரக் கடவன் ஆனால், அவன் உலகில் சந்ததியை விருத்திசெய்யமாட்டான்" என்று தெரிவித்தனர். இவ்வாறு தங்களுள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட வசுக்களும் கங்கையும் தத்தம் இடம் திரும்பினர்.

பிரம்மசபையில் சாபம்பெற்ற மகாபிஷக் மன்னன் பிரதீபமன்னனின் புதல்வனாக மண்ணுலகில் பிறந்தான். அப்புதல்வனுக்குச் சந்தனு என்னும் பெயர் சூட்டி மன்னன் வளர்த்துவந்தான். சந்தனு தக்க முறையில் வளர்ந்து இளைஞனாகிய வேளை பிரதீப மன்னன் சந்தனுவுக்குச் செய்தியொன்றைத் தெரிவித்தான். "மகனே தேவலோகப் பெண்ணொருத்தி எனக்கு மருமகளாக வருவாள் அவள் விருப்பத்திற்கேற்ப நடந்துகொள். அவள் குலத்தைப் பற்றியோ, செயல்களைப்பற்றியோ யாதும் விசாரிக்க வேண்டாம் இது என் கட்டளை" இவ்வாறு கூறிப் பிரதீபன் சந்தனுவிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டுத் தான் தவம் செய்யும்பொருட்டுக் கானகம் புக்கான்.

சந்தனு மன்னன் அஸ்தினாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு சிறப்பாக நாட்டைப் பரிபாலித்துவந்தான். சந்தனு மன்னன் வேட்டையாடுவதில் மிக்க பிரியமுடையவன். அவ்வாறு வேட்டையாடி மகிழ்வுறும் வேளை ஓர் நாள் கங்கைக் கரையில் அழகும் ஒப்புயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்ற வசீகரமும் கொண்ட இளநங்கை ஒருத்தியைக் கண்டான். சந்தனு மன்னவன் அவளைக்கண்டு அதிசயித்து நின்றவேளை அப்பெண்ணும் மன்னனை நோக்கி வந்தாள். அவளின் பேரழகில் ஈடுபட்டு வியந்து நின்ற சந்தனு மன்னன் அவளை நோக்கி நீ யார்? உனது பெயர் யாது? என்பது போன்ற வினாக்களை அவளிடம் வினவினான் அத்துடன் தன்னை மணம் புரிய வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டான்.

இதனைச்செவிமடுத்த அவ்விளநங்கை "மன்னா, உன்னை நான் மணம் புரிவதாயின் நான் சொல்லும் நிபந்தனைகட்கு நீ கட்டுப்படுதல் வேண்டும். அதாவது நான் யார் என்பதனை நீ அறியக்கூடாது நான் செய்யும் எச் செயலையும் தடுத்தல் கூடாது. என் மனத்தைப் புண்படுத்தும் வண்ணம் நீ செயற்படுதல் கூடாது. இந்த நிபந்தனை கட்கு நீ உடன்படுவாயேயானால் உன்னை நான் மணம் புரிந்து கொள்வேன். இந்நிபந்தனைகளை மீறி நடந்தால் அக்கணமே யான் உன்னை விட்டு நீங்கிவிடுவேன்." என்று எடுத்துரைத்தாள். அதற்கிசைந்த சந்தனுமன்னன் கங்காதேவியாகிய அந் நங்கையைத் தன்னாட்டுக்கு அழைத்துச் சென்று மணம் புரிந்து கொண்டான். அழகு, உயர்பண்பு நிறைந்தவளாகிய கங்காதேவியுடன் சந்தனு மன்னன் இன்பமாக வாழ்ந்து வந்தான்.

இதன் பயனாய்ச் சந்தனுமன்னனுக்குத் தன் வயிற்றில் பிறந்த ஏழு ஆண்குழந்தைகளையும் கங்காதேவி தான் வசுக்களுக்கு கொடுத்த வாக்கின் படி ஆற்றிலே வீசிக்கொன்றாள். இதனைக் கண்ணுற்ற சந்தனுமன்னன் மிகவும் மனவேதனையுடன் தந்தையின் கட்டளையை நினைத்தும் கங்காதேவிக்குக் கொடுத்த வாக்கின்படியும் மௌனமாக இருந்தான். இவ்வேளை எட்டாவது குழந்தையும் பிறந்தது. அக்குழந்தையையும் கங்காதேவி ஆற்றில் வீச முனைந்தசமயம் அவளைத் தடுத்து நிறுத்திய சந்தனுமன்னன் "பெண்ணே நீ யார்? இக்கொடிய செயல்களைச் செய்யும் கொடுங் குணமுடையவளாக இருக்கும் நீ இழிநிலையடையப் போகின்றாய்' என்று தன் தந்தையின் கட்டளையையும் மீறிக் கங்காதேவியைக் கண்டித்தான். அப்போது கங்காதேவி "மன்னா, நான் உனக்கு விதித்த நிபந்தனைகளை மீறிவிட்டாய் இனிநான் உன்னுடன் வாழமாட்டேன். உன்னுடைய இப் புதல்வனைக் கொல்லமாட்டேன் எனது தந்தையின் பெயர் யஹ்நு மகரிஷி எனது பெயர் கங்கை அட்டவசுக்களுக்கு உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு யான் உனக்கு மனைவியானேன். உன் புதல்வர்களாகப் பிறந்தவர்கள் அட்டவசுக்கள். அவர்களைப் புதல்வர்களாகப் பெற்றமையால் நீ பெரும் பாக்கியசாலி. அட்டவசுக்களின் ஆற்றல்களையும் பெற்றுப் பிறந்திருக்கும் இப் புதல்வன் மிக மேன்மையுடையவனாகத் திகழ்வான்'' என்று கூறினாள். இதனைச் செவியுற்ற சந்தனுமன்னன் ''ஆ அப்படியா அட்டவசுக்கள் எவ்வாறு வசிட்டமகரிஷியின் சாபத்துக்குள்ளானார்கள் அந்தச் சம்பவத்தை விளக்குவாயாக'' என்று வேண்டினான். அதற்கிணங்க கங்காதேவி ''பாரதகுலச் செம்மலே வருணபகவானுடைய புதல்வராகிய வசிட்டமகரிஷியின் தபோவனத்திலே நந்தினியென்னும் ஒரு தெய்வீகப்பசு இருந்தது. ஓர் நாள் இத்தபோவனத்திற்கு அட்ட வசுக்களும் அவர்கள் மனைவியரும் வருகைதந்திருந்தனர். அப்போது பிரபாசன் என்னும் வசுவின் மனைவி பசுவின் அழகால் கவரப்பட்டு அதனைப் பற்றித் தன் கணவனிடம் வினவினாள். அப்போது பிரபாசன் ''பெண்ணே இப்பசு தெய்வீகச் சிறப்புடையது இதன் பாலைப் பருகும் மானுடர் இளமை குன்றாமல் பதினாயிரம் ஆண்டுகள் வாழ்வர். வசிட்டமகரிஷியிடம் இது வளர்கிறது என்று கூறினான்'' இதனைச் செவியுற்ற பிரபாசனின் மனைவி தன் பூவுலகத்தோழி ஒருத்திக்காக இப்பசுவைப் பிடித்துத் தரும்படி வேண்டினாள். தன்மனைவியின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டுப் பிரபாசன் மற்றைய வசுக்களுடன் சேர்ந்து பிடித்துக்கொண்டனர்.

வசிட்டமகரிஷி தபோவனத்தில் அவ்வேளை இருக்கவில்லை. தபோவனத்துக்குத் திரும்பிய மகரிஷி பசுவைத் தேடினார். காணாத நிலையில் ஞானதிருஷ்டியினால் அஷ்டவசுக்கள் அதனைக் கவர்ந்து சென்றதை அறிந்து மிககோபமடைந்து ''எனது நித்திய தேவைகளை நிறைவேற்றும் பசுவைப் பிடித்துச்சென்ற வசுக்கள் அனைவரும் மானுடராகப் பிறக்கக்கடவர்'' என்று சபமிட்டார். மகரிஷியின் சாபம் தங்களுக்குக் கிடைத்ததையறிந்த வசுக்கள் மகரிஷியிடம் விரைந்து வந்து அவரை வணங்கி சாபவிமோசனம் அளிக்குமாறு வேண்டினர் அப்போது மகரிஷி ''நீங்கள் மானுடராகப் பிறந்த கணமே சாபவிமோசனம் பெறுவீர்கள் ஆனால், பசுவைக்கவர்ந்து சென்ற பிரபாசன் மட்டும் பூவுலகில் ஒப்பற்ற கீர்த்தியுடன் நீண்டகாலம் வாழ்வான். ஆனாலும், அவன் தன்வம்சத்தைப் பூவுலகில் நிலை நிறுத்தமாட்டான்'' என்று சாபவிமோசனமளித்தார்.

இதனாற் கவலைகொண்ட வசுக்கள் மானுடராகப் பிறப்பதற்கு என்னைத் தாயாகவும் உங்களைத் தந்தையாகவும் இருக்கவேண்டுமென,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவசுக்களாயிருந்து முன் சாபவிமோசனத்தின் பொருட்டே பிறந்த ஏழு குழந்தைகளையும் நீரில் விட்டுக்கொன்றேன். பிரபாசன் மட்டும் இப்பூமியில் நீண்டகாலம் வாழ்வான். பெரியோனாகி, சகலகலைகளையும் கற்றறிந்த பின் உன் புதல்வனை உன்னிடம் ஒப்படைக்கின்றேன்." தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் யானும் உன்னை வந்து சந்திக்கின்றேன். நான் இப்போது விடைபெறுகிறேன்" என்று கூறிய கங்காதேவி புதல்வனுடன் மறைந்தாள்.

கங்கையின் நாயகன் என்ற தலைப்பின் கீழ்வரும் பாரதக் கதையின் பகுதியிலிருந்து நாம் உளங்கொள்ள வேண்டிய அறவுரைகள் பலவுள. மானுடனின் எண்ணத்தின் நினைவுகள் என்றும் தூயதாக இருத்தல் வேண்டும். எக்கணத்திலும் தீய சிந்தைகட்கு இடமளியாது தூயோனாயிருத்தல் வேண்டும். மனத்தின் தூய்மையே வாழ்வில் மேன்மையைத் தரும் என்பது அறநூல்கள் பகரும் பரிசாகும். மகாபிஷக் மன்னன் சொர்க்கலோகத்தில் மேம்பாடுடைய வாழ்க்கையில் திளைத்திருந்தவன் ஒருகணம் அவன் மனத்திலே தோன்றிய சலனம் அவனை மானுடனாக மண்ணுலகில் பிறக்கவைத்தது. பிள்ளைகளையிழந்து, மனைவியையிழந்து, பரிதவிக்கும் நிலையேற்பட்டது. மேலான வாழ்வு இடர் தரும் வாழ்வாய் மாறியது.

வசுக்களில் ஒருவனாகிய பிரபாசன் மனைவியின் ஆசையை நிறைவேற்றி வைத்து அல்லற்படுகிறான். மானுடனாகப் பிறக்கிறான். மானுடர்க்கே உரிய இன்பதுன்பங்களால் அலைப்புற்றுத் துன்பமெய்துகின்றான். வேண்டாத செயல்களைச் செய்ததனாலும் தவறான ஆசையை நிறைவேற்றியதாலும் அவன் வாழ்வு துன்பத்துக்கேதுவாகிறது. வசிட்ட மகரிஷியின் பசு என்று அறிந்திருந்தும் அதனைக் கவர்ந்து சென்றது எத்துணை பாதகமானது. ஆசைக்கோர் எல்லைவேண்டும், எட்டும் பொருள், எட்டாப் பொருள் என்ற பேதத்தை உணர்தல் வேண்டும். ஆசையின் விளைவு அவலம் என்பதனைப் பெண்கள் நன்றாக உளங்கொள்ள வேண்டும். இவ்விருகருத்துக்களையும் மானுடம் மேன்மையுற உளங்கொண்டொழுகுவோமாக.

சிவத்திரு வ. குமாரசுவாமி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமும் அனர்த்தமும்

ஒரு சிற்றூரில் இருந்த பாடசாலை ஒன்றில் தமிழாசிரியர் ஒருவர் சிறுகாலத்தில் நல்ல முறையில் வாழவேண்டும் என்பதை மனத்திற் கொண்டு, ஒளவை கூறிய அறங்களில் ஒன்றையாவது ஒவ்வொரு மாணவரும் தன் வாழ்நாளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று உறுதிசெய்யும்படி அறிவுறுத்தினார். அதன்படியே ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு நீதியைத் தன் வாழ்நாளிற் கடைப்பிடிக்க உறுதி எடுத்துக் கொண்டான்.

பாடசாலை விடுமுறையில் ஒரு நாள் ஊரின் குளக்கரையில் கோவிந்தன் என்ற மாணவன் தன் வீட்டு மாடுகளை மேயவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். குளத்தின் மறு கரையில் அவன் வகுப்பில் படிக்கும் தினகரன் என்ற மற்றொரு மாணவனும் தன்னுடைய வீட்டு மாடுகளை மேய விட்டு ஒரு மரத்தடியில் தான் கொண்டு வந்திருந்த புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். மரத்தின் அடியில் வைத்திருந்த தினகரனின் மதிய உணவை அங்கிருந்த ஆடுகள் தின்று விட்டு பாத்திரத்தைத் தட்டி விட்ட போதுதான், அவன் படிப்பிலிருந்த கவனம் மாறினான். ஆகையால் அவன் உணவு உண்ணாமல் படித்துக் கொண்டே பொழுதைக் கழிக்கலானான்.

இவற்றைப் பார்த்துக் கொண்டு மறுகரையில் இருந்த கோவிந்தன் தினகரனைத் தன்னிடம் அழைத்தான். நான் நம் தமிழாசிரியர் கூறியபடி "ஐயமிட்டு உண் என்பதை என் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளேன். இன்று ஒருவரையும் காணோமே என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் போதே நீ உணவு உண்ணாமல் இருப்பதைக் கண்டு உன்னை அழைத்தேன். நான் எடுத்து வந்துள்ள உணவை இருவரும் சாப்பிடுவோம்" என்றான். அதற்குத் தினகரன் "நான் நம் தமிழாசிரியர் கூறியபடி "ஏற்பது இகழ்ச்சி" என்ற ஒளவையின் அறவுரையை என் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளேன். ஆகையால் நான் உன்னுடைய உணவை உண்ண மாட்டேன்" என்று மறுத்து விட்டான். இவர்கள் இருவரும் மதிய உணவு பற்றியும் ஒளவையின் அறவுரை பற்றியும், தங்களது கொள்கைப் பிடிப்பையும் விவாதித்துக் கொண்டிருக்கும் போது, அவர்களுடைய மற்றுமொரு நண்பன் அங்கு வந்து சேர்ந்தான். அந்த மாணவன் அவ்விருவரின் விவாதத்தின் காரணத்தை விசாரித்து விட்டு "நீங்கள் இருவரும் உங்கள் விவாதத்தை விடுத்து உணவு உண்ண ஆரம்பிக்கலாம்" என்றான். ஏனென்றால் 'ஏற்பது இகழ்ச்சி' 'ஐயமிட்டு உண்' என்று கூறிய ஒளவைதான் 'மேன்மக்கள் சொற் கேள்' என்றும் கூறியுள்ளார். ஆகையால் நீங்கள் ஒளவையின் கூற்றைக் கேட்கவும் வேண்டும் அதன்படி நடக்கவும் வேண்டும் என்று தனக்குத் தோன்றிய தீர்ப்பைக் கூறினான்.

இம் மூவரும் இவ்வாறு விவாதத்தில் ஈடுபட்டு இருக்கும் பொழுது அவ்வழியாக இவர்களுக்குக் கற்பித்த தமிழாசிரியர் வந்தார். முழுவதையும் கேட்ட ஆசிரியர் "நீங்கள் என் சொல்லுக்கு மதிப்பு வைத்து ஒவ்வொருவரும் ஒரு நீதியைக் கடைப் பிடிப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. ஆனால் நீங்கள் ஒளவையின் கூற்றின் உள்ளடக் கருத்தைச் சரியாக அறியாமல் கடைப்பிடித்ததால்தான் குழப்பமடைந்தீர்கள்" என்றார். 'ஏற்பது இகழ்ச்சி' என்ற அறவுரைக்கு, சோம்பேறியாய் இருந்து தனக்கும், சுற்றத் தாருக்கும் தேவையானவற்றைக் கூட உழைத்துச் சம்பாதிக்காமல் மற்றவர் கையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த கருமத்தைத்தான் அவ்வாறு கூறினார். இது போன்று ஒரு அவசியமான நேரத்தில் உணவைப் பெற்றுக் கொள்வது எப்படி ஆகாது அதே போன்று ஐயமிட்டு உண்' என்பதற்கு நாம் உணவு உட்கொள்வதற்கு முன் வறியவருக்குத் தானம் செய்து விட்டு உண்ண வேண்டும் என்பதே பொருள். பெறுவதற்கு ஒருவரும் இல்லா விடின் நாம் மற்றவரை வற்புறுத்தியாவது தானம் செய்து விட்டுப், பின்புதான் உணவு உண்ண வேண்டும் என்று பொருள் கொள்ளக் கூடாது.

மூன்றாவதாக "தையல் சொற் கேளேல்" என்பது ஒளவையாருக்குப் பொருந்தாது. ஒன்றன்றால் ஒளவை ஒரு வயதான முதாட்டி, தையல் என்ற சொல்லுக்கு மங்கை என்று பொருள். அந்த வயதிலே ஒரு பெண்ணுக்குக் குடும்ப நலன் என்ற பற்று மனப்பான்மை குறைவாகவும், தன்னுரிமை என்ற குணம் நிறைந்தும் இருக்கு மாதலால் அந்தப் பக்குவ நிலையை அடையும் வரையில் "தையல் சொற் கேளேல்" என்று கூறியிருக்கின்றார்.

"எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க நீதியின் உட் கருத்தை அறிந்து சிறப்பு அதன்படி நடக்க வேண்டும் என்று கூறி முடித்தார்.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

---

## பக்தரும் சித்தரும்

ஒரு பக்தரும் ஒரு சித்தரும் நீண்ட காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். கடுமையான வெயில் இருவருக்கும் தாகம் ஏற்பட்டது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீர் இருக்கும் இடமே தெரியவில்லை. இருவரும் நீரைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். தூரத்தில் ஒரு நீர்ச்சுனை தெரிந்தது. ஆனால் அந்தச் சுனையின் அருகில் தண்ணீர் இருக்கவோ மட்டுமன்றி அந்தச் சுனையைச் சுற்றிலும் முட்புதர்களும், கொடிகளும் மண்டிக் கிடந்தன.

தண்ணீரை அடைவதற்கு சித்தர் ஒரு வழியைக் கண்டு பிடித்தவராய்ப் பறவை போல் வடிவம் எடுத்துப் புதர்களை கடந்துச் சென்று தண்ணீரைக் குடித்துத் தாகம் தீர்ந்தார். ஆனால் அதற்கு முன் செடிகளை அவர் தாண்டிச் செல்ல வேண்டியிருந்ததால் உடல் பூராவும் காயம் ஏற்பட்டது.

ஆனால் பக்தரோ இருந்த இடத்தில் இருந்தபடியே நீர் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று இறைவனைத் துதித்து நின்றார். இறைவன் மன மிரங்கி அவருடைய பக்தியை மெச்சி இருந்த இடத்திலேயே அவருக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து அவருடைய தாகத்தைத் தீர்த்தார்.

கடவுளை அடைவதற்காகச் சித்தரும் பக்தரும் கைக் கொள்ளும் மார்க்கங்கள் இப்படித்தான் இருக்கின்றன.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசிகாண்ட அறிமுகம்

காசி காண்டம் என்பது அதிவீரராம பாண்டியர் என்பவரால் பாடப்பட்டது. இது சுமார் 2500 பாடல்களைக் கொண்டது. தமிழ்மொழிக் கந்தபுராணத்திற்கு மூலமாக உள்ள ஸ்காந்த மகா புராணமே காசிகண்டத்திற்கும் மூலநூலாகும். காசிகாண்டம், கந்தபுராணம் என்பவை தவிர வேறு பல தல வரலாறுகளிற்கும் உபதேச காண்டம் என்னும் தமிழ் நூலுக்கும் மூலமாக விளங்குவது வடமொழி ஸ்காந்த மகா புராணமேயாகும்.

காசிகாண்டத்தில் பல கோணங்களில் காசியின் பெருமை கூறப்பட்டுள்ளது. கங்கா நதி-காசிவிசுவநாதலிங்கம் என்பவற்றின் பெருமைகள் மட்டுமன்றி வேறுபல விடயங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. சுவர்க்கம் முதலிய பல உலகங்கள் பற்றிய அரசனமான குறிப்புகள் இதில் இடம் பெற்றுள்ளன. அகத்தியர் முதலிய முனிவர்களின் மகிமை - உலோபா முத்திரையின் பெருமை, கற்பின் சிறப்பு, ஒவ்வொருவரும் தம்தம் மரணகாலத்தை முன்னரே அறியும் வழி போன்றவையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நவரவக் கடவுளின் தோற்றம்-மகிமை, பிலோபகத் திருவிழா-அபிட்ட திருதியை முதலிய நூதன விரதங்களை அனுட்டிக்கும் முறை போன்ற விடயங்களும் காசிகாண்டத்தில் இடம்பெற்றுள்ளன.

---

இல்லொழுக்கம் கூறியமை, கற்புலக்கணம் கூறியமை, ஆசாரம் கூறியமை, பிரமச்சாரியம் கூறியமை போன்ற பகுதிகளில் ஸ்மிருதி போன்ற நூல்களின் கோட்பாடுகளும் மனுநீதி போன்ற நூல்களில் கூறப்பட்ட சில விடயங்களின் அடிப்படைக் கோட்பாடுகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கற்பிலக்கணம் கூறியமை, மகளிர் இலக்கணம் கூறியமை போன்ற பகுதிகளில் பெண்களின் நடைமுறை எனக் கூறப்படும் பகுதிகள் மகளிர் சுதந்திரம் பற்றிய இக்காலக் கோட்பாடுகளிற்கு மாறானவை என்றும் இவை போன்ற கருத்துக்கள் இதில் இடம் பெற்றிருப்பதால் இந்நூலிலுள்ள ஏனைய அம்சங்களையும் இக்காலத் தலைமுறையினர் ஒதுக்கிவிடக்கூடும் எனவும் சிலர் கருதுகின்றனர்.

இக்கால நிலையில் உலகெங்கும் வேகத்துடனும் முற்போக்குச் சிந்தனைகளுடனும் பெண்ணுரிமை-கற்பு பற்றிய பழைய கோட்பாடுகள் மதிப்பிழந்து வருகின்றன என்பது பிரத்தியட்ச உண்மையே என்றாலும் இப்படியான கோட்பாடுகளின் அடிப்படையில் இப்படியான நூல்களில் உள்ள பிற நல்ல-அரிய செய்திகளையும் நிராகரித்து ஒதுக்கி விடுதல் விவேகமற்றது என்பதை ஒவ்வொருவரும் தம் பகுத்தறிவினாலேயே கண்டு கொள்ளலாம்.

இவ்வுலக வாழ்வின் இன்பங்களையே முடிந்த முடிபாகக் கொண்டிருக்காது இல்லறமும் கணவன் மனைவி இருவரும் சேர்ந்தே ஒரு குடும்பம் - ஒரு குடும்பத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஒன்று-கோட்பாடு பொது என்ற தன்மையினாலும், ஸ்மிருதி போன்ற நூல்களில் மிக மேலானதாகப் போற்றும் அந்தணர்க்கும் பல கட்டுப்பாடுகளையும் விதித்திருப்பது போல பெண்களுக்கும் விதித்திருக்கின்றன என்றும் கொண்டால் இத்தகைய நூல்கள் பற்றி நல்லெண்ணம் கொள்ள முடியும். சிவபெருமானுக்கு முழுமுதன்மை மேலும் இச்சாரிகொண்டதுகள் திருமால் நன்று பெருமைப்படுத்தப் பட்டிருப்பது உண்டு மகிழத்தக்க விடயமாகும். இது மட்டுமன்றி பிரமதேவரும் நன்கு துதிக்கப்பட்டிருக்கிறார்.

துர்க்கை என்ற அசுரனைச் சங்கரிப்பதற்காக அம்பிகை துர்க்கையாகச் சென்ற வரலாறும் துர்க்கையின் வெற்றியின் பின் தேவர்கள் அளித்த வச்சிர பஞ்சர கவசம் என்னும் சக்தி கவசமும் காணக் கூடியதாகவே உள்ளன.

சிவசன்மாவின் வரலாறு - கேதாரலிங்கத்தின் கதை ஓங்காரலிங்க வரலாறு. வியாசர் வகையும் நாவும் இடைக் கதை முதலிய பல பகுதிகளின் கதைப்போக்கிலும் கதைகளின் இடையில் சொல்லப்பெறுவனவாகவும் உள்ள நீதிகளும் அரிய உண்மைகளும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கருத்துப்பெட்டகங்கள் எனலாம்.

‘‘.................. சிரத்தையுடன் பொருள் தேடினேன்...........வாதங்களில் வெற்றி பெற்றேன். இப்படியான செயல்களில் என் இளமை முழுவதும் போய்விட்டது. என் இளமைக் காலத்தில் சிவனடியாருக்குத் தொண்டு செய்து மேன்மையடையாது விட்டுவிட்டேன், திருமாலை வணங்கவுமில்லை, இலிங்கமாகிய பூசனை புரியாமல் என் வாழ்நாள் முழுவதும் வீணாகிவிட்டன. விநாயகப் பெருமானையோ, முருகப்பெருமானையோ, சூரியனையோ, உமையம்மையையோ பூசை செய்து என் வாழ்நாளை பயனுடையதாக்காமல் விட்டு விட்டேன். என் செல்வத்தால் ஆலயங்கள் அமைக்காது விட்டுவிட்டேன் மேலும், குளம் கிணறு அமைக்கும் புண்ணியத்தையும் நான் செய்யவில்லை. பிரயாணம் செய்பவர்க்கு ஆதரவாக நிழல் மரம் நடுவதைக் கூட நான் செய்யவில்லை. வெயிலால் வாடுபவர்க்கு ஒரு வேளை நல்ல நீர் கொடுக்கும் தருமமும் செய்யவில்லை...... இன்னும் வேதம் ஓத வேண்டிய என் கடமையையும் செய்துகொள்ளவில்லை. அமாவாசை, வெள்ளிக்கிழமை, திரயோதசியுடன் கூடிய ஞாயிற்றுக்கிழமை, அட்டமி நாட்களில் வேப்பமரத்துடன் கூடிய அரசமரத்தை மௌனத்துடன் வலம் வந்து என் பாவங்களைப் போக்கவுமில்லை........ இனி யமதூதுவர் கொடுமையுடன் கட்டியிழுத்துச் செல்லும் பொழுது யார் சொல்லமுடியும்?......

‘‘பல்லுலகைத் தத்தித் திரியும் மரத்தைப் பார்த்து சந்திரனுக்கு இருப்பிடமாகிய மராமரமே! பெண்ணே! எனக்கு ஆயுள், புகழ், செல்வம், உறவு, புத்திரர், அறிவு, நிறைவு, இலக்கம், புனிதம், ஆற்றல், நீதி, ஞானம், அனுபவம் என்பவை கிடைக்கத்தக்க பரந்த உன்னதனையை வழங்குக என வணங்கிப் பல்லுலகும் தத்தியை முடிக்க வேண்டும் இப்படிச் செய்வதால் சந்திரதேவனின் அருள் கிடைக்கும்!’’

‘‘அறிவை ஏற்க மாட்டாத உண்மை. இருவருக்கும் ஆன்மபூரணமாக்குந் தன்மை யல்லாததைக் கூறாது விடுவாய்.’’

இவை போன்ற இனிய பல உண்மைகளைக் காசிகாண்டத்தில் மூலம் அறியலாம். இப்படியான பல விடயங்களை எல்லோரும் அறிய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் சுழிபுரம் சைவ நன்னெறிக்கழகத்தினர் சகோத்தில் காசிகாண்ட வசன நூலை வெளியிட்டுள்ளனர்.

பண்டிதர் நீ. பொன்னம்பலவாணர்,
பொன்னாலை, சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி முருகன்

## சரித்திரச் சுருக்கம்

யாழ்ப்பாணத்திலுள்ள சைவத் திருத்தலங்களுள் புதுமையும் பழமையும் வாய்ந்த செல்வச்சந்நிதி முருகனின் பெருமை பலருக்குத் தெரிந்த ஒன்று. ஈழத்தின் பல பாகங்களிலும் சிவபெருமானின் திருக்குமாரர்களில் முருகக் கடவுளின் திருத்தலங்கள் அதிகம் இருந்தும் இவ்வளவு மகத்துவம் அதில் இல்லையென்பது. செல்வச்சந்நிதி முருகன் திருத்தலத்திற்கு ஈடானது இது என் கருத்துமட்டுமல்ல ஈழவாழ் முருக பக்தர்களால் பேசப்படும் ஒரு மாபெரும் விடயமாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 16 மைல்கள் தொலைவில் உள்ள செல்வச்சந்நிதி முருகப் பெருமானது வரலாற்றை பொது மக்களுக்கு அறியத்தருவதைப் பெரும் பாக்கியமாகக் கருதி முருகனின் புனித வரலாற்றை எழுதுகிறேன்.

உடுப்பிட்டித் தொகுதியில் இருக்கும் செல்வச் சந்நிதியில் பூவரசு, ஆல், அத்தி, அரசு, போன்ற விருட்சங்களுடன் இயற்கை பொலிய அமைதியாக வீற்றிருக்கும் எம் பெருமானாகிய முருகப் பெருமான் அன்றுமுதல் சகல இன மக்களுக்கும் (சிங்களவர், பறங்கியர்) உட்பட அனேக மதங்களை கருணைக்கண் அருளையும் ஆசி கூறுவதுடன் அருள்புரிகிறார்.

கிட்டத்தட்ட இருநூறு (200) வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் ஆட்சி செய்த தொண்டைமான் என்னும் தமிழ் மன்னன் உப்பு விளைவித்து வர்த்தகம் செய்ய விரும்பி இந்தியாவில் இருந்து பாக்கு நீரிணை வழியாக கப்பலில் வந்து இலங்கையின் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியாக உள்ள வடமராட்சிப் பகுதியின் கரவெட்டிப் பகுதியில் உள்ள உப்பளத்திற்கு வந்து வெளித்தரையில் உப்பு விளைவிப்பதால் வர்த்தகம் செழிக்கும் என்று ஒரு முக்கியமான உணர்ந்த (சித்த) முனிவர் மூலம் அறிந்து அவரது ஆட்களுடன் கரையாலின் வல்லையின் வழியாக கால்வாய் வெட்டுவித்து பட்டை தீவு கரணவாய்க்கு கொண்டு சென்று உப்பு விளைவித்து வணிகம் செய்வித்தான். (இக்கால்வாய் பிற்காலத்தில் தொண்டைமான் வெட்டிய படியால் தொண்டைமானாறு என்று காரணப் பெயரால் அழைக்கப்படுகிறது).

இங்கே விளைந்த உப்பை வாங்குவதற்காக இந்தியாவிலிருந்து செட்டிமார் இலங்கை வந்து தொண்டைமானுடன் வணிகம் செய்து வந்தார்கள். அப்படிச் செய்தவர்கள் தொண்டைமானுடன் இருந்தவரும் முனிவரைத் தெய்வமாக எண்ணி அவருக்கு பால் பழங்கள் கொடுத்து வழிபட்டு அவருக்கு கரையோரத்தில் சிறுகுடிசை அமைத்துக் கொடுத்தனர்.

இன்று மிகவும் பிரசித்த சரித்திர வரலாற்றுச் சின்னமாக அம்முனிவர் கல்லறையாகிய சமாதி தற்போதைய கோவிலின் மேல் பக்க ஆற்றுப் பக்கமாக உள்ள வள்ளியம்மன் வாசலிலுள்ள (பிரகாரத்திலும்)

மேலும் இம்முனிவருக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருந்த தொண்டைமான் படகோட்டிகளுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் மனைவரான நிலங்கள் வழங்கப் பட்டன. (அவர்கள் விருப்பப்படி படகோட்டிகளுக்கு கரையோரங்களும் மற்றும் தொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளர்களுக்குத் தோட்டத் தொழில் ஆர்வமுள்ளதால் அவர்களுக்குத் தோட்டக் காணிகளும் வழங்கப்பட்டன) இன்றும் அவரது பரம்பரையினர் அவ்விடத்து வாழ்ந்து வருகின்றனர்.

இம்முனிவர் மூன்று காலங்களையும் அறிந்து அரசனுக்கும் அவனது உப்பு வாணிகத்திற்கும் உதவிபுரிந்து வந்தபடியால் அரசனும் அவனைச் சார்ந்தவர்களும் அம்முனிவரைத் தெய்வமாக வழிபட்டனர். அக்கோடி இவரின் மகிமையைத் தெரிந்த மக்கள் அவ்விடம் வந்து அவரை வழிபட்டு ஆசிபெற்றுச் சென்றனர்.

இவரது கால மாற்றத்தில் ஓர் நாள் அவர் வழமைபோல இளைப்பாறும் பூவரசமர அடியில் சமாதி அடைந்து விட்டார். அன்று தொட்டு இவரின்மேல் அபார பக்தியுடன் விளங்கிவந்த செட்டிமார் அந்தப் பூவரசமரத்தடியில் சிறு கோவில் கட்டி வழிபட்டனர். (அக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயம் திருக்கோணமலை திருக்கோணேச்சரம், போன்ற புனித ஆலயங்கள் ஒல்லாந்தரால் தரைமட்டமாக்கப்பட்ட போது இச்சிறு ஆலயமும் உடைக்கப்பட்டது) மீண்டும் அதைப் புதுப்பித்து வழிபடத் தொடங்கினர். அந்நாளில் அப்பகுதியிலிருந்த மாந்தி, பேதி நோய்களால் அதிகமாகச் செட்டிமாரின் குடும்பம் அழிந்து தலைப்பட்டதே அவர்களது தெய்வ பக்தியை மறந்த முனிவர் ஒருநாட்டு முருகன் கடலில் மீன் பிடித்துக்கொண்டு இருக்கும் போது அவனுமுன் காட்சியளித்து அவனைத் தலைக்கு விளக்கு வைத்துப் பூசை வைக்கும்படி கூறினாராம். அவரது கட்டளையைப் பயபக்தியுடன் சிரமேற்கொண்டு அக்குலைக் குடும்பத்தினரையே அவ்வாலய பூசகர்களாக்கியபோது அம் மரணங்களையே அருகக் கட்டுவாக எண்ணி வேல் வைத்து வழிபடத் தொடங்கினர். அதன் பின் ஆலயத்தில் நல்ல பக்தர் பிணிகள் நீங்கிச் செல்வம் பெருகத் தொடங்கின. அப்போது ஆண்டவனுக்கு வாய்கட்டிப் பூசை செய்து வந்த மீனவப் பரம்பரையினரே தற்போதைய பூசகர்களாகக் கடமையாற்றும் குடும்பத்தினராகும். இவர்களைப் போன்றே இவர்களைப் பூசகர்களாக வைத்து அவர்களுக்கும் வாளாய் பெண்ணூர் பிற உதவிகளைச் செய்து வந்த செட்டிமார் இன்றும் ஏழு தலைமுறையாக அவ்வாலய அருகில் வாழ்ந்து வருகிறார்கள்.

வேல் வடிவில் வந்த முருகப்பெருமான் இன்று பக்த கோடிகளின் நன்கொடைகளினாலும் செல்வச் சீமான்களின் ஆதரவினாலும் பெரும் கட்டட ஆலயமாக உருவாக்கப்பட்டு அன்னதானங்கள் இடம்பெறுவதாலும் அன்னதான மடங்களையும் உருவாக்குவித்து பக்தர்களின் பசி தீர்க்கும் சித்தனாகவும் காட்சி அளிக்கின்றார்.

இவ்வாலயத்தைச் சுற்றிய பகுதியின் தெற்குப் புறமாக தொண்டைமானால் வெட்டப்பட்ட வாய்க்காலின் கடல் நீரும் மேற்கும் தெற்கும் வடக்கும் சுற்றி அன்னதான மடங்களும் மரங்களும் சோலையுடன் செழிப்புடன் விளங்குகின்றது பக்தர்களைப் பரிபாலிப்பதாலேயோ என்னவோ செல்வச் சந்நிதி முருகப் பெருமான் என்று நாமப் பெயர் சூட்டி அன்புடன் அழைக்கிறார்கள்.

இப்புனித ஆலயம் வருடா வருடம் வரும் ஆவணி மாதத்தில் தொடர் உற்சவத்துடன் நிறைவுறா விசேடம் கோலாகலத்துடன் ஆரம்பிக்கும். இவ்வாலயத்தில் சப்பறம், தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்கள் அதிக தெய்வாம்சத்துடன் நடைபெறும். இக்காட்சியைப் பார்ப்பதற்காக அதிக அளவில் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வந்து குவிப்பார்கள்.

-முற்றும்-

ஜெயந்திபன்

(மருதங்கேணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ வாசகம்

பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர் என்னும் கிராமத்தில் நாட்டை ஆளும் அரசர்களுக்கு அமைச்சர் வேலையைப் பரம்பரையாக செய்து வரும் அமாத்தியப் பிராமணர் குலத்தில் சம்புபாதசிரயருக்கும் சிவஞானவதியாருக்கும் புத்திரராக மாணிக்கவாசகர் திரு அவதாரம் செய்தார். இவருக்கு பெற்றோர் திருவாதவூரர் என்னும் திருநாமத்தைச் சூட்டினார்கள். இவருடைய ஆட்சித் திறமையை அறிந்த அரசன் இவருக்குத் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்தை வழங்கினான். பாண்டிய அரசன் தனது படைபலத்தைப் பெருக்குவதற்காக குதிரைகள் வாங்கி வருமாறு பொன், பொருள் என்பவற்றைக் கொடுத்து தனது முதல் அமைச்சர் பரிவாரங்களுடன் அனுப்பி வைத்தான். திருப்பெருந்துறையிலே மாணிக்கவாசகரை ஆட்கொள்வதற்காக இறைவன் குருவடிவம் தாங்கி சீடர்களுடன் காத்து இருந்தார். குருநாதருடைய அருட் பார்வைக்கு ஆட்பட்டு தாம் அனுப்பப்பட்ட தொழிலை மறந்து மணிவாசகனார் உள்ளம் உருகினார். முகில்போல் கண்ணீர் மழை பொழிய தன்னை அருளை கொள்ள வேண்டுமென இறைவனிடம் இரந்து நின்றதை "இவ்வகையை தன்னை கொல்லிலை யறிவாள் வேண்டுமென் இறைஞ்சி நின்றார்" எனத் திருவாதவூரடிகள் புராணம் விளக்குகிறது. மணிவாசகரின் பக்குவ நிலையை அறிந்த இறைவன் தனது அருட்பார்வையினால் பாசக் கட்டினிலும் பக்குவமடைய வேண்டியே தீட்சை கொடுத்து அவரை ஆட்கொண்டார் என்பதை "சிந்தனைக்கரிய சிவத்துடைய செம் பங்கயமொழியார் தம்மேற் பதித்தருள் செய்தார்" எனத் திருவாதவூரடிகள் புராணம் பகர்கிறது.

சிவபெருமான் குருந்தமர நிழலில் ஞானி வடிவில் தென்னவன் பிரமராயன் மாணிக்கவாசகரை திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட பெருமை சிவப் பெருமானின் கருணையும் திருமேனி இறையருள் பெற்று புதிய கோலமும், பக்தி விசேஷம் பெற்று சிவன் அளித்த புனித மொழியும் கண்களும் கரைந்து உருகி குருவருளின் தன்மையைப் பூரணமாக அனுபவித்து நிலை பெற்று காட்சி தந்தார். குதிரை வாங்க கொண்டு சென்ற பொருளையெல்லாம் சிவ சேவைகளில் செலவழித்துவிட்டார். மாணிக்கவாசகரைப் பட்ட மேட்ட துன்பமாக மாற்ற விரும்பிய பெருமான் அவருக்குப் பல சோதனைகளைக் கொடுத்தார். காட்டில் உள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி பாண்டி நாட்டிற்கு பரிமேலே நரையனார் சேவகனாக இருந்து அவற்றைக் கொண்டு வந்து சேர்த்தார். அன்று இரவே குதிரைகள் எல்லாம் நரிகளாக மாறி பாண்டி நாட்டையே காட்டிக் கொடுத்துவிட்டன. பாண்டிய அரசன் அளவில்லாத ஆத்திரம் கொண்டான். இவ்வாறு ஏமாற்றியமைக்கு வந்த பாண்டியனது மனப்பான்மையைப் போட்டித் திருவாதவூரருக்குப் பொற்றுக்கும் தண்டனையும் வழிமொழி கற்பிக்கப்பட்டது. இப்பிட்டு உருக்கமான பொன் ஊதியாகவது போன்று இவனைக் கதிகக்குளை பத்திரமாக சிவ பக்திமான மணிவாசகரிடம் வரவும் பெற்றது. மணிவாசகருக்கு நடத்த துன்பங்களினால் பாண்டிநாட்டின் வைகை நதி பெருக்கெடுத்தோடி மதுரை மாநகரையே அழித்தது. பிட்டுக்கு மண் சுமந்த செம்மைச் சொக்கர் இறைவனே கூலியாளாக வந்து பிரம்படி பட்டான். பாண்டிநாட்டிலே இவ்வாறு அனைத்துக்கும் ஏற்பட்ட பின்னர் பாண்டிய அரசனுக்கு ஞானம் ஏற்பட்டது. பாண்டிய அரசன் தான் அறியாமையினால் மணிவாசகருக்கு கொடுத்த தண்டனைகளுக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டான். மணிவாசகனார் அனைத்து உலகப் பற்றுக்களில் இருந்தும் விடுபட்டு மீண்டும் திருப்பெருந்துறைக்கு தனது பரமாசாரியாரை நோக்கி ஓடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை ஆட்கொண்டு அருள வேண்டுமென்று குரு வடிவம் தாங்கி நின்ற இறைவனிடம் மணிவாசகனார் இரந்து வேண்டி நின்றார். இறைவனும் மணிவாசகருடைய வாயால் தெய்வ வாசகமாகிய திருவாசகத்தைக் கேட்க விரும்பினார். திருத்தலங்கள் தோறும் சென்று வணங்கி அன்பு வாசகமாகிய திருவாசகத்தை அருளி சற்றும் பொன்னம்பலத்துக்குச் சென்று அங்கு புத்தரையும் வாதில் வென்று திருச்சிற்றம்பலமுடையானுடைய திருவருளுக்கு பாத்திரமாக என்று இறைவன் மணிவாசகரை வேண்டியதாக "மல்லுமண்புடைய தெய்வ வாசகம் புகலுமாறும்" எனத் திருவாதவூரடிகள் புராணம் விளக்குகிறது. மணிவாசகனார் திருவாசகத்தைப் பாட நடராஜனே தன் கைப்பட எழுதி திருச்சிற்றம்பலமுடையான் என்று கையொப்பமும் இட்டார். திருவாசகத்தின் பொருளை விளக்குமாறு அடியார்கள் வேட்க ஆடவல்லானின் திருவுருவத்தைக் காட்டி அவன் தான் பொருள் என்று கூறியவர் பாலில் நீர் கலந்தாற்போல ஆடவல்லானின் திருவடிச்சோதியில் இரண்டறக் கலந்தனர்.

துன்பங்கள் பலவற்றைத் தொடர்ந்து அனுபவித்த மணிவாசகரின் பக்தி நிலையிலே கருங்கல்லை பொன் ஊசி துளைப்பது போன்று பக்தியானது தீவிர பக்தியாக மாறியது. மணிவாசகரின் தீவிர பக்தியால் தோன்றிய தேனூறும் மதுர வாசகங்களே திருவாசகமாகும். மணிவாசகர் பல துறைகளில் ராஜாவாகத் திகழ்ந்தார். பாண்டிய அரசனின் முதலமைச்சராய் இருந்த காரணத்தினால் புவிராஜன் ஆனார். பக்திரசம் ததும்பும் திருவாசகத்தைத் தந்ததினால் கவிராஜன் ஆனார். சிறந்த தவ வாழ்வு வாழ்ந்ததினால் தவராஜன் ஆனார். பெருந்துறையில் பரமனிடம் உபதேசம் பெற்றதினால் பக்தராஜன் ஆனார். புவிராஜனாக, கவிராஜனாக, தவராஜனாக, பக்தராஜனாக எல்லாம் திகழ்ந்த மணிவாசகனார் இறுதியில் நடராஜனுக்கே சொந்தமானார்.

திருவாசகம் ஐம்பத்தொரு பதிகங்களையும், அறுநூற்று ஐம்பத்தாறு பாடல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சிவபுராணம், போற்றித் திருஅகவல், கீர்த்தித் திருஅகவல், திருவண்டப்பகுதி ஆகிய நான்கு நீண்ட அகவல்கள் காணப்படுகின்றன. சிவபுராணம் தத்துவ விளக்கத்தில் தலைசிறந்து விளங்குகிறது. சிவபுராண வரிகள் ஒவ்வொன்றும் அர்ச்சனை மலராக இறைவனின் பாதத்தில் சமர்ப்பிக்கக் கூடிய மந்திர வாசகங்களாகக் காணப்படுகின்றன. திருவாசகத்தோடு இணங்கும் நெஞ்சினர் கடவுள் மயமாகி விடுகின்றனர். நமசிவாய என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை இடையறாது உச்சரிப்பவர்கள் சிவனேயாகும் ஆகின்றனர். உயிர் நோயாகிய பிறவிநோய் தீர்க்கவல்ல ஆடவல்லானாகிய நடராஜனைத் துதிக்கின்ற சிவபுராணத்தை உணர்ந்து ஓதுவதோடு உள்ளக்கமலத்திலே நடராஜனை உணரவும் வேண்டும் என்பதனை

அல்லல் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் சிவபுரத்தின் கண்ணார் சேவடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

என்று சிவபுராணப் பாடல் பகிரல் நிறைகின்றது. இறைவன் பரமாசாரிய வேடந் தாங்கி மணிவாசகரை ஆட்கொண்ட இடம் திருப்பெருந்துறை ஆகும். திருவாசகம் திருப்பெருந்துறையில் அருளப்பெற்ற பாடல் அன்று. பக்தி வைராக்கிய சரித்திரத்தை வெளிப்படுத்தும் அருட்பாடல்களாகவே திருவாசகப் பாடல்கள் அமைந்துள்ளன. இக்கவிஞரின் சகலவிடயத் தன்மையை "வாயில் ஆகி மலை ஆகி கனி ஆகி தனி ஆகி" என்ற பாடல் விளக்குகின்றது. "தன்னை அறிந்தவன் தத்துவ ஞானி" என்னும் இந்நாளைக் கொட்பாட்டிலும், தெய்வத்தை உணராது தன்னை யின் அறிந்தும் இருக்கிற அறிவுறுத்துவதாக திருவாசகப் பாடல் அமைந்துள்ளது.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடல் ஆய வெள்ளத்தே.

திருவாசகம்

சிவத்துரை சித்துஜா - சிவயோகலிங்கம்
(இரண்டாம் - வகுப்பு ஆசிரியர் மாணவன்)

---

பஞ்சகவ்வியம்

பசுவிலிருந்து பெறப்படும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகிய ஐந்து பொருட்களும் பஞ்சகவ்வியம் எனப்படும். இவை இறைவனுக்குச் சிறந்த அபிஷேகப் பொருட்களும் ஆகும்.

இந்து மதத்தில் கோயில்களிலும் வீடுகளிலும் இவ்வைந்து பொருட்களும் சேர்க்கப்படுகின்றன. பூசித்து மந்திரங்களால் சிறந்த வலுவைப் பெறுகின்றன.

எனவே இன்று பஞ்சகவ்வியம் அபிஷேகத்திற்கு உகந்தது. கிருமிகளையும் நீக்கும் வல்லமை மிகு பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவை ஒன்று சேரும் போது மாற்றம் ஒன்று நிகழ்கின்றது. அதுவே தொற்றுநோய்க் கிருமிகளை நீக்கும் சக்தியைப் பெறுகின்றது.

ஆதலால் பசுவைப் போற்றுவோம்
பசுவை வளர்ப்போம்

செ. நிமலோஜன் ஆசிரியர்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# பெறுதற்கரிய பிறவி

"மனிதப் பிறவி இழிந்தது. தள்ளப்பட வேண்டியது" என்பன போன்ற கருத்துக்களை நம்முடைய சமயம் அழுத்திச் சொல்லுகின்றது. "யாக்கை நிலையில்லாதது. வாழ்வு நிலையற்றது." என்பன போன்ற நிலையாமைக் கருத்துக்களைக் கூட நிலைத்த இலக்கியமாகச் சொல்லுவது நம்முடைய மொழி.

ஒருவர் நேற்று இருந்தார். உண்டார். மகிழ்ந்தார். இடப்பக்கத்திலே இருதயம் இருக்கிற பக்கத்திலே "இறை" சற்றே நொந்தது என்றார். சற்றே உடலைக் கிடத்தி உறங்க வேண்டுமென்று படுத்தார். அவ்வளவு தான்! அவர் விழிக்கவே இல்லை அவருடைய சரித்திரம் முடிந்தது.

"அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"

என்று சிரிக்கிறார் திருமூலநாயனார்.

மனித வாழ்வின் இறுதி நிலையைச் சொல்ல வருகிறார் அப்பர் சுவாமிகள். கபம் முற்றி மூச்சுவிட முடியாது உயிர் ஊசலாடுகிற நிலையைச் சுட்டிக் காட்டுகிறார். உயிர் போனவுடன் சுற்றத்தார்கள் கூடி உடலை அலங்கரிக்கிறார்கள். அதற்கு மையையிடுகிறார்கள் ஈற்றில் மயானத்திலிடுகிறார்கள் என்கின்றார்.

"ஐயினால் மிடறடைப் புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங் குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"

என்பது அப்பரது அருமைத் திருத்தாண்டகம். உயிரை "ஆவியார்" என்று கிண்டலாகக் குறிப்பிடுகிறார் அப்பர் சுவாமிகள். தந்தை யார்? தாய் யார்? தாரம் ஆர்? புத்திரர் ஆர்? தாம் ஆர்? என்று கேள்விக்குறியை வெளிப்படை எழுப்பி இந்த வாழ்வு உலகியல் வாழ்வு உண்டு உடுத்து உறங்கும் வாழ்வு 'மாயமாம்' என்று தெளிவு படுத்துகிறார். இவ்வாறு திருமூலநாயனார், அப்பர் பெருமான், மணிவாசக சுவாமிகள், பட்டினத்தார் போன்ற அருளாளர்கள் நிலையாமையைப் பற்றி மிகவும் தெளிவாகவும் அழுத்தமாகவும் பாடியுள்ளார்கள். அவ்வாறு பாடியதன் மூலம் நிலையாமையையே நிலைத்த இலக்கியப் பொருளாக அமைத்து ஆக்கியிருக்கிறார்கள். அதைவிட முக்கியமாக, பேருண்மை தோன்றினை எதிர்மறை முகமாக வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது உடம்பை ''மெய்'' என்றும், அன்றுடைய பொழுது அழிக்கும் பொய்யாகிப் பழங்கதையாகப் போய்விடக் கூடிய உடலை ''மெய்'' என்று சொல்வதில் சமய ரீதியில் ஆழமான அர்த்தம் இருக்கிறது. அழிந்து விடக் கூடிய உடலோடு வாழுகின்ற காலத்திலே, அழியாத ஒன்றைப் பற்றிக்கொள்ளவேண்டும். மெய்ப்பொருளாகிய இறைவனை அடைதற்கு, பொய்யாய்க் கழிந்து போகக்கூடிய உடலமே சாதனமாக அமைந்து விடும். அந்த வகையில் அதற்கு 'மெய்' என்று பெயர். எனவே நமது சமய நிலையாமையை அழுத்திக் கூறுவதன் மூலம் நிலைத்த பேரின்பத்தை நாமடைய வேண்டும் என்ற கருத்தைத் தெளிவாகவும் உறுதியாகவும் எடுத்தியம்புகிறது. நிலையாமையை அழுத்திச் சொல்லுகின்ற அப்பர்பெருமான், திருமூலநாயனார் போன்ற அருட்செல்வர்களே மனிதப்பிறவியின் உயர்வையும் தெளிவுறச் சொல்லி உள்ளார்கள்.

அப்பர்பெருமான் தில்லையிலே நடராஜவள்ளலை தரிசிக்கின்றார். தாண்டவ மூர்த்தியின் திருக்கோலத்திலே தம்மை மறந்து, ஒருவாறு தெளிவுபெற்று, இத்தரிசனத்துக்குச் சாதனமாக இருக்க இந்த மனிதப்பிறவி இழிந்த பிறவியல்ல. இது வேண்டிப் பெறத்தக்கது என்று பாடியருளினார்.

> ''குனித்த புருவமுங் கொவ்வைச்செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
> பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
> இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

என்ற அற்புதமான தேவாரம் அப்பர்வாசகத்தை இவ்வுலகத்துக்குக் கொடுத்தது. இதற்கு ஒருபடி சென்று ''வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி இங்கும் பாவிக்குமோ இப்பிறவியே'' என்றெல்லாம் பாடியருளுகின்றார் அப்பரடிகள்.

திருமூலநாயனாரோ, இறைவனது திருவருளைப் பெறுதற்கு வாய்த்திருக்கின்ற பிறவி ''பெறுதற்கரிய பிறவி'' என்கின்றார். இதனைக் கொண்டு பெறுதற்கரிய பேறாகிய இறைவனது திருவடிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். அவ்வாறு பெறமுயலாதவர்களைப் பார்த்து ''பெறுதற்கரிய பேற்றினை இழந்து விட்டார்களே'' என்று சொல்லுவதன் மூலம் மனிதப்பிறவியின் உயர்வுக்கு இறைவன் திருவடியே என்பதை வலியுறுத்துகின்றார்.

> ''பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
> பெறுதற் கரிய பிரானடி பேணார்
> பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
> பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே''

என்பது அவரது அருமைத்திருவாக்கு.

பெறுதற்கரிய மனிதப் பிறவியைத் திருவருளால் பெற்ற நாம் பெறுதற்கரிய பேரின்பமாகிய பேற்றினைப் பெறும் முறையில் இப்பிறவியைப் பேணும் வகையில் பேணி உய்திபெறுவோமாக.

ச. விநாயகமூர்த்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திரு

# முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகள்

## 13வது ஆண்டு

## குருபூசைத்தினம் 30-07-1998



காலம்: 30-07-98 வியாழக்கிழமை காலை 9 மணி

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

தலைவர்: நல்லை ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப்பெரியோர்களின் சொற்பொழிவைத் தொடர்ந்து சுவாமிகளின் குருபூசைத்தினப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும்.

சே. மோகனதாஸ்

## மயில்வாகனம் சுவாமிகளின் 13வது ஆண்டு குருபூசைத்தினப் போட்டிகள் - 1998

1. குறட்பா அறிவுப்போட்டி
2. பேச்சுப்போட்டி

பிரிவுகள்

| | |
|---|---|
| பிரிவு i | ஆண்டு 6-7 |
| பிரிவு ii | ஆண்டு 8-9 |
| பிரிவு iii | ஆண்டு 10-11 |

ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் குறட்பா அறிவுப்போட்டியிலும் பேச்சுப்போட்டியிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் ஆண்டு பிறந்த திகதி, பாடசாலை என்பவற்றின் விபரங்களை அதிபர் மூலம் அல்லது தமது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 10-07-98ற்கு முன் தபால்மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம். விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு போட்டிபற்றிய விபரங்கள் அனுப்பிவைக்கப்படும்.

போட்டிகள் 26-07-98இல் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு 30-07-98இல் நடைபெறும் குருபூசைத் தினத்தில் பணத்தொகையும், பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

குருபூசைப் போட்டிக்குழு,
சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியில் அன்னதானத்தொண்டு

1987 ஆம் ஆண்டு வடமராட்சி இராணுவச் செயலைத் தொடர்ந்து ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சூழ உள்ள மக்கள் இடம் பெயர்ந்ததுடன் ஆலயத்தின் நித்தியபூசைகளும் தடைப்பட்டது. இதன் பின்பு வடமராட்சிப்பகுதி ஓரளவு வழமைநிலைக்கு திரும்பி நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுது சந்நிதி கோவிலில் தடைப்பட்டிருந்த அன்னதானத்தொண்டை திரும்பவும் ஆரம்பிக்க வேண்டிய அவசிய தேவை ஏற்பட்டது. ஆனால் அவ்வாறு ஆரம்பிப்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. காரணம் அங்கே சேதமுற்ற மடங்களை புனரமைத்து திரும்பவும் அன்னதானப்பணியை ஆரம்பிப்பதென்பது சிக்கல் நிறைந்த ஒரு பணியாகவே காணப்பட்டது. ஆனாலும் திரு. மோகனதாஸ் அவர்கள் தனது குருநாதர் பயில்வான் சுவாமிகளின் தொண்டை தொடர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

இந்த வகையில் ஆலயத்தின் கிழக்கு வீதியில் ஆலயத்தை நோக்கி வரும் பொழுது காணப்படும் முதலாவது மடமான அனுசம்மா மடத்தைப்புனரமைப்புச் செய்து வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்து சந்நிதியான் ஆச்சிரமம் என்ற பெயரில் 1988 பங்குனி உத்தரதினத்தன்று அன்னதானப்பணியை திரு. மோகனதாஸ் அவர்கள் ஆரம்பித்தார்கள். வடமராட்சி மக்கள் பல்வேறு வகையான இழப்புக்களை மிக மோசமாக எதிர்நோக்கியிருந்த காலகட்டத்தில் இது போன்ற தர்மகாரியங்களுக்கான நிதி உதவிகளை அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்க முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலை நிலவியது. ஆனாலும் அன்னதானப்பணி என்பது சந்நிதியில் நிரந்தரமாக நடைபெற வேண்டியதும் அவசிய தேவையாக இருந்தது. இந்த நிலையில் அன்னதானப்பணிக்கு உதவக்கூடிய அன்பர்களை நாடிச் சென்று அந்த நல்ல உள்ளம் படைத்த அன்பர்களின் உதவியுடன் தனது குருநாதர் செய்த பணியை குருநாதர் செய்த வழியில் செய்யத்தொடங்கினார். இக்காலத்தில் ஆற்றங்கரையானின் திருநாமத்தை உச்சரித்து பஜனைகள் பாடி திருவாசக முற்றோதல் செய்து சந்நிதியில் தங்கியிருக்கின்ற அடியார்கள் அவரும் மற்றும் சந்நிதியே தஞ்சமென வாழ்கின்ற மக்கள் கூட்டத்தினரும் நாளும் பசியாறுகின்ற இடமாகவும் சந்நிதியான் ஆச்சிரமம் மாறத்தொடங்கியது. இக்காலகட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளால் கவரப்பட்ட தவத்திரு முருகேசு சுவாமிகளும் திரு. மோகனதாஸின் செயற்பாடுகளை மனமாரப்பாராட்டி அவருக்குத் தேவையான பல்வேறு உதவிகளையும் வழங்கத்தொடங்கினார்கள். இவ்வாறு முருகேசு சுவாமிகள் அருட்பார்வை சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு கிடைத்ததினால் பின்பு சிறப்பாக அதாவது பயில்வான் சுவாமிகள் அன்னதானச்சேவையை செய்தது போன்று சந்நிதியான் ஆச்சிரமத்திலும் சிறப்பாக அன்னதானப்பணி நடைபெற்றுவந்தது.

ஆனாலும் இக்காலகட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் செயற்பட்டுவந்த இடத்தின் உரிமையாளர்கள் அதனை உடனடியாகத்தம்மிடம் திருப்பி ஒப்படைக்குமாறு கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனைய சந்நியாசிகள் ஆச்சிரமத்தை வேறொரு இடத்தில் புதிதாக அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் இது எளிதானகாரியமாக எவருக்கும் தெரியவில்லை. ஒரு பைக்கற் சீமெந்து 1600 ரூபா விற்பனை செய்யப்பட்ட அக்காலகட்டத்தில் இந்த முயற்சியை வெற்றிகரமாக முடிக்க முடியுமா என்றே பலரும் நினைத்தனர். ஆனால் தனது குருநாதரான மயில்வாகன சுவாமிகள் தோன்றாத் துணையாக இருந்து தனக்குத்துணை செய்வார் என்ற குருபக்தியையும் ஆற்றல்களை முருகனின் அருட்கடாட்சத்தையும் நம்பி இன்று சந்நியாசிகள் ஆச்சிரமம் செயற்படும் இடத்தில் புதிய கட்டிட வேலைகளை திரு. மோகனதாஸ் அவர்கள் ஆரம்பித்தார்கள். இக்கட்டிடத்திற்கு அத்திவாரம் இடும் வேலைகளை முருகேசு சுவாமிகள் தானே தனது கைகளினால் ஆரம்பித்து வைத்தார்கள். அன்னதானத்தை நடாத்துவதற்கு அமைவாக 90 அடி நீளமும் 15 அடி அகலமுமுடைய மண்டபவேலை முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென கோவில் பெருமக்களை முருகேசு சுவாமிகளும், மருத்துவத்துறை ஆகிய ஸ்ருடியோ உரிமையாளரும் பொறுப்பேற்று வேலைகளை ஆரம்பித்தனர். கட்டிட வேலைகளில் 30 அடி நீளமான வேலைகள் ஓரளவு பூர்த்தியடைந்த நிலையில் 05 - 05 - 95 இல் புதிய சந்நியாசிகள் ஆச்சிரமம் அன்னதானத் தொண்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

புதிய ஆச்சிரமம் திறக்கப்பட்ட நாளில் திரு. மோகனதாஸ் அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் அந்த மகிழ்ச்சி நீடிக்க முடியாதவாறு முருகேசு சுவாமிகள் ஒரு செய்தியை மோகனதாசிற்கு தெரிவித்தார்கள். ஆம்! அந்த 30 அடி முடிவடைந்த கட்டிட வேலைகளைத் தாங்கள் தொடரப் போவதில்லை என்றும் அதற்கு பதிலாக அழுதக்கு ஒரு பூசை மண்டபம் ஒன்றை புதிதாக அமைத்து தங்கள் தருவதாகவும் குறிப்பிட்டார்கள். அப்பொழுது அந்த கட்டிடத்தின் மேத்திரியாராக செயற்பட்ட வல்வெட்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் மேத்திரியார் (இளையவர்) மற்றும் இலக்கணாவத்தையைச் சேர்ந்த திரு. தில்லையம்பலம் இருமிதல் அரசரத்தினம், திரு. அருணாசலம் ஆகியோரும் அவ்விடத்தில் கூட இருந்தனர். இந்த செய்தியைக் கேட்ட மோகனதாஸ் அவர்கள் என்ன சொல்லுவதென்று தெரியாது மிகவும் கலக்க முற்றுக் கவலைப்பட்டார். ஒரே நேரத்தில் அதிகளவான அடியார்களை அமர்த்தி அன்னதானத்தை நடாத்துவதற்கு ஆமையாக அமைக்கப்பட்ட கட்டிட வேலைகள் ஸ்தம்பிப்பதென்பது அவரால் ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே இருந்தது. இந்த நிலையில் மிகவும் மனம் நொந்து மிகுந்த மனச்சஞ்சலத்துடன் தனது சோதனைகளை ஆற்றலை முருகப்பெருமானிடமும் தோன்றாத்துணையாக இருந்து எத்தருணத்திலும் தன்னைக் காத்தருளுகின்ற மறைந்த குருநாதர் மயில்வாகன சுவாமிகளிடமும் முறையிட்டுவிட்டு தன்னால் முடிந்தவரை வேலைகளைச் செய்ய முற்பட்டார்.

07 - 05 - 95 காலை வல்வெட்டி சுந்தரலிங்கம் மேத்திரியார் திரு. மோகனதாசிடம் வந்து "சாமியார் புதிய மண்டபத்தை கட்ட வேண்டாமாம் செய்து கொண்டிருக்கிற மண்டபவேலையைத்தான் கெதியில் முடிக்கட்டும் அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கு என்னை அனுப்பியுள்ளார்" என்று கூறி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியம் மேலோங்க திரு. மோகனதாஸ் அவர்கள் என்ன நடந்தது என்று மெத்திரியாரிடம் விளக்கமாகக் கேட்ட பொழுது.

'எனக்கு சாப்பிடுவதற்கு இடமில்லாமல் நான் துன்பப்படுகின்றேன். உன்னை எதற்காக இங்கே அனுப்பிவைத்தவாள். நீ அடியார்கள் திருப்தியாக இருந்து சாப்பிடுவதற்குரிய மண்டபவேலையை முதலில் தொடங்கு'' என்று முருகன் கனவிலே தோன்றி சாமியாருக்கு கட்டளையிட்டுள்ளார் என்று கூறிமுடித்தார். ஆம் இதன்பின் 80 அடியுடன் நிறுத்தப்பட்ட 90 அடி மண்டப வேலைகள் உடனடியாக சுவாமியாரால் ஆரம்பிக்கப்பட்டு, பின்பு பல அன்பர்களின் ஒத்துழைப்புடனும் இன்று இருக்கும் நிலையில் முற்றுப்பெற்றது.

இப்படியாக முருகனது அருட்கட்டளையினால் கட்டிமுடிக்கப்பெற்ற சந்நிதியான் ஆச்சிரமத்தின் சூழலில் எவ்வளவோ அனர்த்தங்கள் நடைபெற்ற பொழுதும் இக் கட்டிடங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதிருப்பது ஒரு அதிசயமே. அதே போல படி அரிசி 185 ரூபா விற்ற பொழுதும் முருகனை வழிபடவரும் அடியவரின் பசிப்பிணியைப் போக்கும் வண்ணம் நித்திய அன்னப்பணியை அக்காலகட்டத்திலும் இடைநிறுத்தாது இன்றுவரை தொடர்ந்து நடாத்தி வருவதற்கு காரணமும் எம்பெருமானது கருணையே. இவ்வகையில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளை எம் பெருமான்தான் முன்நின்று வழிநடத்துகின்றார் என்பதை உண்மையான முருகனடியார்கள் இன்றும் உணரக்கூடியதாகவுள்ளது.

மேலும் சுவாமியார் உருவாக்க நினைத்த அறுபத்துமூவர் குருபூசை மண்டபமும் அவர் இறைவனடி சேர்ந்த பின்பு அவருடைய அன்பர்களால் புதிதாக அமைக்கப்பட்டு 16 - 06 - 98 இல் ஞானபண்டித கலாவித்தகி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் முறைநிறைவுடன் திறந்துவைக்கப்பட்டது.

''ஆம் எம்மால் எதுவுமே நடக்காது எல்லாம் அவன் அருளாலே .. ''

திரு. நா. அகிலேசுந்திரன்
தொண்டைமானாறு.

---

முதலில் இறைவனைத் தேடு; பிறகு உலகப் பொருளைத் தேடு. இதற்கு மாறாகச் செய்யாதே. ஆத்ம ஞானத்தை அடைந்த பிறகு நீ உலக வாழ்க்கையில் நுழைந்தால் உனக்கு மனச்சஞ்சலமே இராது

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியத்தின் இன்னொரு பண்பு உரைநடை வளர்ச்சியும், உரைநடைப் பாங்கான இலக்கியங்களின் தோற்றமுமாகும். ஈழத்து உரைநடை வளர்ச்சியில் இரண்டு வகையான பண்புகள் காணப்பட்டன.

1. பழைய உரையாசிரியர்கள் கையாண்ட உரைநடை. இவ்வுரைநடையானது கல்வியறிவுடையோர் மட்டுமே படித்து விளங்கக்கூடிய தர்க்கரீதியானதும், கடினமான சந்திவிகாரங்களைக் கொண்டதாகவும் காணப்பட்டன. பெயரெச்ச வினையெச்சங்களை நீட்டி எழுதுதல், வடசொற்களை அதிகளவில் பிரயோகித்தல், வழக்கொழிந்த சொற்பிரயோகங்கள் போன்ற பண்புகளையும் கொண்டிருந்தன.

2. நவீன உரையாசிரியர்கள் கையாண்ட உரைநடை மேல்நாட்டவர் தொடர்பு, சமயப்பிரசாரம், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள், நவீன புனைகதை இலக்கியங்களின் வளர்ச்சி போன்ற காரணங்களின் பின்னணியில் இவ்வுரைநடை தோன்றியது. பொது மக்கள் இலகுவாகப் படித்தறியக் கூடிய சொற்கள், சொற்றொடர்களைப் பயன்படுத்துதல், கடினமான சந்தி விகாரங்கள் நீக்கப்பட்டு சிறு சிறு வாக்கியங்களாக எழுதுதல், ஆங்கில உரைநடையின் குறியீட்டு முறைகளைப் பயன்படுத்தல் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தன.

வசன நடை கைவந்த வல்லாளர் எனப்படும் நாவலர் நவீன உரைநடையின் தந்தையாவார். நாவலர் காலத்திற்கு முன்னரும் தமிழில் உரைநடை வளர்ச்சியடைந்திருந்தபோதிலும் பொதுமக்களுக்கு எவ்வகையிலும் அது பயன்படவில்லை. நாவலரது உரைநடையில் பின்வரும் இயல்புகள் காணப்பட்டன. பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் எளிமையாகவும் இலகுவாகவும் அமைந்திருந்தமை, நீண்டவரை சிறிய வசனங்களாக எழுதப்பட்டிருந்தமை, உயிர்த்துடிப்பான சொல்லாட்சிகளைப் பயன்படுத்தியமை, கடினமான சந்தி விகாரங்கள் நீக்கப்பட்டிருந்தமை, ஆங்கில உரைநடையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றிக் குறிப்பிட்டு முறையாகக் கையாண்டமை, கருத்துச் செறிவு, இன்னோசை, வடமொழிக் கலப்பு போன்ற பல பண்புகள் காணப் பட்டன.

அவர் எழுதிய பால பாடங்கள் சிறுவர்களுக்கு நற்சிந்தனையை ஊட்டி வளர்க்கும் நோக்கோடு எழுதப்பட்டன. கந்தபுராண, பெரிய புராண வசனங்கள் சாதாரண மக்களுக்காக எழுதப்பட்டன. அவரது கண்டனங்களுக்கும் பதில் கூறும் வகைக்கும் சைவ தூஷண பரிகாரம் சிறந்த எடுத்துக் காட்டாகும். அவரது உரைநடை ஆக்கங்கள் மூன்று வகையினதாகக் காணப்பட்டன. பாலபாடங்கள், சைவவினா விடைகள், ஒரு வகை புராண வசனங்கள், யாழ்ப்பாண சமய நிலை முதலியன வேறொரு வகை கண்டனங்கள், துண்டுப்பிரசுரங்கள் வேறொரு வகையின.

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியத்தின் இன்னொரு அம்சம் உரைநடைப்பாங்கான இலக்கியங்கள் தோன்றியமை ஆகும். கிறிஸ்தவ மதப்பிரசாரத்தினாலும் ஆங்கிலேய நாகரிகத்தினாலும் எமது மரபு வழிப்பண்பாடு சீர்குலைவது கண்டு அதனைச் சீர்திருத்தும் வகையில் நாவலிலக்கியத்தை ஒரு கருவியாகக் கொண்டனர். முகம்மது காசிம் சித்திலெவ்வை முதல் ஈழத்து தமிழ் நாவலை எழுதினார். சன்மார்க்க சீவியத்தின் பெருமையை உபதேசத்தால் விளக்க முடியுமென்ற சிந்தனையில் நொறுங்குண்ட இருதயம் என்னும் நாவல் எழுந்தது. இதற்கு மாறாக கோபால நேசரத்தினம், காசிநாதர் நேசமலர் போன்ற நாவல்கள் எழுந்தன. இவ்வாறு நாவல் இலக்கியங்கள் தோன்ற எழுத்தாளர்களின் புலமைக்கேற்ப மொழிநடையும் விருத்தியடைந்து சென்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கியத்தில் இன்னொரு அம்சம் பழந்தமிழ் நூற்சுவடிகளைக் கண்டு பிடித்து அவையவற்றை அச்சிட்டு நூல்களாக வெளியிடுவதாகும். இத்துறையில் ஈழம் தமிழுலகத்திற்கே வழிகாட்டியாக இருந்தது எனலாம். நாவலரும் பின்னையவர்களும் இத்துறையில் முன்னோடிகளாக விளங்கினர்,

“இலக்கண இலக்கிய பிழைகளும் அச்சுப்பிழைகளுமில்லாமல் உயர்ந்த தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் சைவசமய நூல்களையும் பதிப்பித்து உதவினார். எமது இளமைக் காலத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞரான ஆறுமுகநாவலர் அவர்களே அந்நூல்களைப் பிழையறப் பதிப்பித்து உதவியவராவர் என்று மறைமலையடிகள் நாவலரின் பதிப்பு முயற்சிகள் பற்றி கூறுகின்றார். நாவலர் வழிநின்று இத் துறையில் அரும்பணியாற்றியவர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்.

தொல்காப்பியத்தை பதிப்பிக்க முற்பட்ட போது அதன் ஏடுகள் எவ்வாறு இருந்தன என்பதை "செல் துளைத்த துளையேயன்றி மெய்ப்புள்ளி விரவாத செந்தாளேடு" என்று குறிப்பிடுகின்றார் தொல்காப்பிய ஏடு ஒரு சிலவாய் சுவையும் நெரிந்தும் முறிந்தும் சிதல் வாய்ப்பட்டுச் சிதைந்தும் இறுதி மூச்சுவிடுவனவாகக் காணப் பட்டிருந்தன தனது கலித்தொகைப் பதிப்புரையில் "ஏடு எடுக்கும் போதோரம் சொரிகின்றது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முறிகிறது. புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது எழுத்துக்களோ என்றால் வாலும் தலையுமின்றி நாலு புறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது" என்று கூறுவதன் மூலம் இத்துறையில் அவரது சிரமம் எத்துணை வாய்ப்பட்டதாக அமைந்திருக்கும் என நாம் எண்ணலாம். பதிப்பு முயற்சியில் தான் பட்ட கஷ்டங்களை "நாக்கிவாலன்றோ தெரியும் தலைச்சுமை பரிசோதனாசிரியர் படும் கஷ்டமும் ஓர் அரிய பழையநூலை சுத்தமனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டவர்க்கன்றி விளங்காது எனக்கு வே. சாமிநாத ஐயரும் அவருக்கு நானுமே சாட்சி" என்று கூறுகிறார்.

வணக்கம்.

க. நடராசா

---

இரவில் வானில் பல விண்மீன்களைக் காண்கின்றாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை தென்படுவதில்லை. ஆதலால் பகற்பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞானகாலத்தில் நீ இறைவனைக் காண முடியாததனால், இறைவனே இல்லை என்று சாதிக்காதே.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் உண்மைகள்

1) மழைகாலத்தில் ஒருவர் கூடுதலாகச் சிறுநீர் கழிக்கின்றார் ஏன் தெரியுமா?

❖ மழை காலத்தில் சூழல் வெப்பநிலை குறைவடையும்

❖ வியர்வை சுரப்பிகளைச் சூழ்ந்திருக்கும் குருதி மயிர்க் குழாய்கள் சுருங்கும்.

❖ இதனால் குருதிமயிர்க் குழாயிலிருந்து வியர்வைச் சுரப்பியினுள் விடப்படும் திரவத்தின் அளவு குறைவடையும்

❖ மழை காலத்தில் வியர்வைச் சுரப்பிகள் சுருங்கும் நிலையும் ஏற்படலாம்

❖ இதன் காரணமாக மேலதிகமான நீர் சிறுநீரகத்தினூடு சிறுநீர்வழியில் வெளியேறும்

2) சுறாமீனின் முதுகுப்புறம் கறுப்பாகவும் வயிற்றுப்புறம் வெள்ளையாகவும் காணப்படுவதன் காரணம் என்ன?

❖ சூழலுக்கேற்ற இசைவாக்கம் அடைந்துள்ளதைக் காட்டும்

❖ கடலில் மேலே இருந்து பார்க்கும் பொழுது அடித்தளம் கருமையாக இருப்பதால் சுறாவின் உருவம் இலகுவில் தெரியாது.

❖ கீழிருந்து மேலே பார்க்கும் பொழுது வானம் வெண்மையாக இருப்பதால் இலகுவில் தென்படாது

❖ இது எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் இயற்கைக் கவசம்

(கறுப்பு நிறத்திற்குக் காரணம் மெலனின் என்ற நிறப்பொருள்)

3) வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் பெரும்பாலான நோயாளிகளுக்கு எதற்காகச் 'சேலைன்' ஏற்றப்படுகிறது?

❖ நோயின் பொழுது ஒருவரின் உடற் சீர்த்திடநிலை குழம்புவதால் சேலைன் உடற் சீர்த்திடநிலையை பேண உதவும்

❖ சேலைன் நீரிழப்பு விளைவுகளைத் தடுப்பதால் கலங்கள் சுருங்காது பாதுகாக்கின்றது.

❖ மருந்து, உணவு ஆகியவற்றிற்கான திறனுள்ள ஊடகமாகின்றது. உடலுக்குச் சக்தியை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English (Part-6)

Prepositions are short words usually placed before nouns or pronouns. உருபிடைச் சொற்களானவை குறைந்த எழுத்துக்களைக் கொண்ட சொற்களாகும். இவை பெயர்ச்சொற்களுக்கும் பிரதிப் பெயர்ச்சொற்களுக்கும் முன் அமைந்து இடம், காலம், நிலை, வழிவகை ஆகியவற்றைக் காட்டி நிற்கும்.

1) **At** (a) **At noon (time)** காலத்தைக் குறிப்பது

   (b) **At the age of Sixty (age)** வயதைக் குறிப்பது

   (c) **At home, at school, at bus stop (place)** இடத்தைக் குறிப்பது

   (d) **At a high price (price or amount** விலையைக் குறிப்பது

2) **On** (a) **on wednesday, On January 3rd (on a day or date)** நாளையோ, திகதியையோ குறிப்பது

   (b) **On a bicycle, On horse back (To indicate mode of transport)** பிரயாண வழிவகைகளை குறிப்பது

   (c) **On the ground, On the table (Show Position)** நிலையைக் குறிப்பது

   (d) **On time (accurate time)** குறித்த சரியான நேரத்தைக் குறிப்பது

3) **By** (a) **Be at the station by 10 A. M** (முன்பு என்ற கருத்தைக் கொடுக்கும்

   (b) **Travel by car, bus, train** (இல் என்ற கருத்தைக் கொடுக்கும்

   (c) **He stood by me** (அருகில், பக்கத்தில் எனப் பொருள்படும்)

4) **In** (a) **in a country**

   (b) **in a town**

   (c) **in a street**

   (d) **in a room** ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அமைந்தவை என பொருள்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**in time – on time** என்ற இரு சொற்றொடருக்குமுள்ள வேறுபாட்டைப் பார்ப்போம்

**In time (not late)** குறிப்பிட்ட நேரத்துக்கு பிந்தாமை எனப் பொருள் படும்

**On time (accurate time)** குறித்த நேரம் எனப்பொருள் படும்

5) **From** (இருந்து எனப் பொருள்படும்)

(a) காலத்தைக் குறிப்பது
eg From 6 o' clock to 8 o' clock

(b) பிரயாணத்தில் தன்மையைக் குறிப்பது
eg Mohan flew from Sri Lanka to Canada

(c) இருந்து என்று பொருள்படுவது
He took water from the well

I got money from my friend

(d) **Since** காலம், நேரத்தைக் குறிப்பது அதாவது அந்த நேரத்திலிருந்து இதுவரையில் எனப் பொருள்படும்

eg Mohan has been playing cricket since 8 A. M.
(மோகன் காலை 8 மணியிலிருந்து இது நேரம் வரை கிறிக்கெற் விளையாடிக் கொண்டிருக்கிறான்)

7) **For**

(a) For ten years, For two hours,
For the Christmas holiday
இவை யாவும் கால எல்லையைக் குறிப்பன

(8) **To** க்கு, வரை என்று பொருள் கொடுக்கும்

(a) eg From January to Septmber (இருந்து வரை என்பதைக் குறிப்பது

From Jaffna to Colombo (இருந்து, இக்கு எனப் பொருள்படும்)

(b) மக்களோடும் இடங்களோடும் சம்பந்தப்பட்டு பொருள் கொடுப்பது

Send letters to parent's (மக்களோடு சம்பந்தப்பட்டது
Went to France (இடத்தோடு சம்பந்தப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) திசைகளோடு சம்பந்தப்பட்டு பொருள் கொடுக்கும்

He went to the play ground

He ran to the gate

Fill in the blanks with At, on, by, in, From, Since, For, to

## EXERCISE

1. You must finish the work ____ Friday
2. There is a big crowd ____ the hall;
3. He has not been to School ____ last Tuesday
4. Mohan walked the temple ____ the School
5. The nine O' clock train left ____ time
6. She goes to School ____ bus
7. Ranjith became as a Clerk ____ the age of 20
8. I Shall meet You ____ Friday
9. I bought a bicycle ____ my Son
10. We go for walks ____ the evenings

S. THURAIRAJAH
(English tutor)

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம
யாழ்ப்பாணம்

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

03. 07. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. ந. அரியரத்தினம்
(அதிபர், வீர. மகா வித்தியாலயம்,
தொண்டைமானாறு.

சொற்பொழிவு: "சமய வாழ்க்கை"

வழங்குபவர்: திரு. V. K பாலசுப்பிரமணியம்
(இளைப்பாறிய ஆசிரியர், பருத்தித்துறை)

---

10. 07. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. க. கந்தசாமி
(இளைப்பாறிய தபாலதிபர், கரணவாய்)

வில்லிசை: "முருகனடியான்" பக்திப்பாடல்

வழங்குபவர்கள்: வானம்பாடி வில்லிசைக் குழுவினர்

---

17. 07. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 30 மணியளவில்

அறிமுகவுரை: சைவப்புலவர் வ. கந்தசாமி

விடயம்: ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
சைவசமய அபிவிருத்திக் கழகத்
தினரின் விபூதி அறிமுக விழா

செயற்பாட்டுரை: திரு. இ. விஜயரெத்தினம்
(தலைவர், சா. ம. சை. ச. அ. கழகம்)

சிறப்புரை: பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா

---

24 07. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

அறிமுகவுரை: இசைமணி சி- துரைராஜா

விடயம்: இன்னிசை

வழங்குபவர்: செல்வி விமலாதேவி வியாகேஸ்
வயலின்: பிரம்மஸ்ரீ ம. தியாகராஜசர்மா
மிருதங்கம்: வித்துவான் ச. ஹரிஹரன்
முகர்சிங்: செல்வன் நந்தன்

---

31. 07. 1998 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் - மாத வெளியீடு

## ஆடி - 1998

வெளியீட்டுரை: சிவத்திரு வ குமாரசாமி ஐயர்
நூலகம், வலி வட. பி. ச. காங்கேசன்துறை)

ஆய்வுரை: திரு- ஆறுதிருமுருகன்

---

இவ்வண்ணம்
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப் படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசுகள் வழங் கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 1999 ஜனவரி மாத மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும் அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org